# சுந்தராமிர்தம்



அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். பொன்னு சுந்தரம் (காந்தி)

அவர்களது சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.12.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திரு.பொன்னு சுந்தரம் (காந்தி)

அவர்களது சிவபதப் பேறு குறித்த

நினைவு மலர்

# சுந்தராமிர்தம்

**30.12.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்



ஆளுமையின் இலக்கணமாக நின்று
ஆற்றல் மிகு பல சாதனைகள் செய்து
பண்பாடு தன்னைக் காத்து வந்து
பண்பின் சிகரம் தொட்டு
எம் வாழ்வின் ஒளி விளக்காய்
இம் மண்ணில் வாழ்ந்தவரே!
சீரிய நடத்தையும் நேர்கொண்ட பார்வையும்
சீராக எம்மை வளர்த்த காத்திரச் செயல் அதுவும்
தீர்க்க தரிசனம் மிக்க தெய்வப்பிறப்பெடுத்து
தீதும் நன்றாய் மாற்றும் பெரியோனாய்
நெறி தவறா வாழ்க்கை தன்னில்
பெருமையுடன் எம்மை தலை நிமிர வைத்து
குல தெய்வம் சித்திர வேலாயுதர் ஆலயத்தில்
முதற் பூசைகளை சிரமேற்று செய்து
இடர்கள் அனைத்தையும் தவிடு பொடியாக்கி
இங்கிதமாய் இறைவனடி சேர்ந்த
எம் அன்புத் தெய்வத்தின் பாதக்கமலங்களில்
இம் மலர்தனை காணிக்கையாக
சமர்ப்பணம் செய்கின்றோம்.

குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# பொன்னு சுந்தரம்

அன்னை மடியில்
08.06.1938

ஆண்டவன் அடியில்
30.11.2019

**திதி வெண்பா**

ஆண்டு விளம்பி கார்த்திகைத் திங்கள்
பூண்ட திதி பூர்வபக்க சதுர்த்தி சனிக்கிழமை
சீர் ஓங்கு புகழ் சுந்தரம் எனும் நாமத்தோன்
சித்திர வேலவன் தாழ் சேர்ந்த நன்நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரத் திரட்டு



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவள் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்க லார்புனல் செல்வ மல்கு
சீர்கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தி யாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
　　உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
　　சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
　　அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
　　தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
　　நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
　　பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறவுளறி
　　உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
　　பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
　　வேண்டு கின் றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
　　உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
　　நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்
　　கீழ் இருக்க என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருப்புகழ்

துள்ளும் மத வேள்கைக்கனையாலே
தொல்லைநெடு நீலக்கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத்தெளிவோனே
செய்யகுமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தியின் காலம்

இந்து சமுத்திரத்தின் நடுவினில் இலங்கிடும் ஈழமணித்திருநாட்டின் வடபகுதியின் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் பகுதிகளை இணைக்கும் அச்சுப்போல் விளங்குகின்ற கடல் வளமும் வயல் வெளிகளும் தோட்ட நிலங்களும் ஓங்கி வளர்ந்த தென்னைகளும் இந்து ஆலயங்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் கல்விச் சாலைகளும் சூழப்பெற்று பல கல்விமான்களையும் அறிஞர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற அச்சுவேலி கிராமத்தில் வட்டுமருந்தைக் குறிச்சியிலே சரசாளி சித்திரவேலாயுதரின் சிறந்த அருளோடு வாழ்ந்து வந்த பொன்னு முத்து தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது மூத்த பெண் குழந்தை பிறந்து 5 வருடங்களின் பின் தவமிருந்து பெற்றெடுத்த ஆண் குழந்தையை சீராட்டி பாராட்டி "சுந்தரம்" எனும் நாமம் சூட்டி செல்லப் பெயராக "காந்தி" என்று அழைத்து மகிழ்ந்தனர். அவர்களது இல்லறப் பயணத்தில் பவளம், சுந்தரம்(காந்தி), சிவலிங்கம்(குலம்), தர்மலிங்கம்(தறுமு), தலபாக்கியம்(கிளி), ஜெகசோதி(சோதி) ஆகிய 6 பிள்ளைகளை பெற்றெடுத்து அகமகிழ்ந்தனர். இவ்வாறு தனது குடும்ப உறுப்பினர்களுடன் வாழ்ந்து வந்த சுந்தரம் குறும்புத்தனமும், சுறுசுறுப்பும், புத்திக்கூர்மையும் மிக்க குழந்தையாக அனைவரையும் கவர்ந்து வாழ்ந்து வந்தார்.

## கல்விக்காலம்

சிறு வயதில் குறும்புத்தனம் அதிகம் காணப்பட்ட சுந்தரத்தை கல்வி பயிற்றுவிப்பதற்காக அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியில் சேர்த்து விட்டனர். அங்கு அவர் சிறந்த முறையில் கல்வியினை கற்று ஒவ்வொரு வகுப்பாக சித்தியடைந்து 8ம் வகுப்புவரை முன்னேறிச் சென்றார். குடும்ப கஷ்டம் காரணமாக இடையினில் கல்வியை நிறுத்தி தந்தையாருடன் தோட்ட வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார். இருப்பினும் அவர் கல்வி மீது கொண்ட பற்றினால் மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற காப்பிய நூல்களையும் வேறு பல வரலாற்று நூல்களையும், நாவல்களையும் வாசித்து அவற்றின் பல அம்சங்களை மனதிற்குள் பதிவு செய்தும் வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமைக்காலம்

சிவந்த நிறமும் மெல்லிய தோற்றமும் ஆளுமை மிக்க செயற்பாடும் கொண்ட இவர் அச்சுவேலியில் இருந்து திருகோணமலைக்கு "மொறிஸ் வான்" சேவை வழங்கிய காலத்தில் கந்தசாமி என்பவரது வானிலே நடத்துனராக சிறிது காலம் சேவை செய்த பின்னர் சாரதியாகவும் தனது திறமையை வெளிப்படுத்தி வந்தார். அதிகம் கதைக்க மாட்டார் ஆணித்தரமாக எந்த விடயத்தையும் நீதியோடு சொல்லுவார். இவ்வாறு இவரது இளமைக்காலம் மிகவும் சந்தோசமாகவும் கலகலப்பாகவும் நகரத்தொடங்கியது.

இளமைக் காலத்தில் தனது 3 ஆண் சகோதரர்களுடனும் சகோதரிகள் இருவருடனும் மிகுந்த அன்புடன் இருந்து வந்தார். மூத்த சகோதரி பவளம் மீது அளவு கடந்த பாசமும் பற்றும் வைத்திருந்தார். அவரது சொற்களை மதித்து நடந்து வந்தார்.

## இல்லறப்பந்தம்

பசுமையான பனை வளமும், மணல் மேடுகளும் சூழப்பெற்ற பருத்தித்துறை வராத்துப்பளை கிராமத்தில் வல்லி அன்னம்மா தம்பதிகளின் மகளான பவளராணி என்பவரை தாய் தந்தையர் பேசி திருமணம் முடித்து வைத்தனர். பண்பும் அன்பும் நிறைந்த பவளராணி உறவுமுறைகளை தன்னகத்தே ஈர்த்து இல்லறப் பயணத்தை தொடர்ந்தனர். இவர் திருமணமான பின்னர் இரண்டு A40 ரக கார் வண்டிகளை கொள்வனவு செய்து சாரதிகளை அமர்த்தி கார் வாடகை சேவையினையும் வழங்கி வந்தார். மணவாழ்வின் சிறப்பாக மகப்பேறு மகத்துவமாய் இடம் பெற்றது. இதன் பயனாக ஸ்ரீகாந்(காந்தன்), விஜயகாந்(விசயன்), விமலகாந்(கண்ணன்), இமயகாந்(ரஞ்சன்), ரஜனிகாந்(ரஜனி) எனும் பஞ்ச புத்திரர்களை பெற்றெடுத்தனர். பிள்ளைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து வளர்த்து வந்தார். மூத்தமகனை அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும் இரண்டாவது மகனை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்திலும், மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மகன்களை அச்சுவேலி மகாவித்தியாலயத்திலும் சேர்ப்பித்து கல்வி பயிற்று வித்தார்.

இவ்வாறு இவர்களது இல்லறப்பயணம் தொடர்ந்த வேளையில் நாட்டில் உள்ளூர் யுத்தம் உச்சகட்டத்தை அடைந்து கொண்டு இருந்தது. இதனால் இடப்பெயர்வுகளை சந்தித்த இவர் பிள்ளைகளின் மேற்படிப்பை தொடர்ந்து கற்பிக்க முடியாத நிலையை எண்ணி மிகவும் கவலைப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் இவரது பிள்ளைகள் மூலமாக மருமக்களாக சிவறஞ்சினி, விஜயறாணி, கவிதசிலாஜினி, சுகன்யா, கஜப்பிரியா என்போரை புதிய உறவுகளாக வரித்துக் கொண்டார். தனது சகோதரர்களின் பிள்ளைகளையும் தனது பிள்ளைகள் போன்று பாசம் காட்டி அன்பு பொழிவார்.

குடும்பத்தின் மூத்த ஆண் வாரிசு என்பதால் இவருடைய சகோதரர்களும் சரி ஒன்றுவிட்ட சகோதரர்களும் சரி அவர்கள் வீட்டு விசேட நிகழ்வுகளுக்கு இவரிடம் வந்து ஆலோசனைகளைக் கேட்டு அதன் படி நடப்பார்கள். எல்லோருக்கும் நல்ல வழிகாட்டியாக இருந்து பல சந்ததிகள் கடந்தும் எல்லோருடனும் ஒற்றுமையாக முறை பாராட்டி வாழ்ந்து வந்தார். முன்னுனரும் திறமை இவரிடம் அதிகம் காணப்பட்டது கூர்மையான அறிவும், ஒருவருடைய கதையிலிருந்து அதன் உட்பொருளை துல்லியமாக அறியும் ஆற்றலும், நேர்மையான நடத்தையும் கொண்ட இவரிடம் மற்றவர்கள் எழிதில் காரியம் சாதித்து விட முடியாது. அன்பினால் மட்டுமே இவரை வெல்ல முடியும்.
மற்றையவர்களின் பொருளுக்கோ, சொத்துக்கோ ஆசைப்படாத காந்தி பெயரிற்கு ஏற்றால் போல் காந்தியவாதியாகவே இருந்தார்.

இவர் தனது பிள்ளைகள் மூலமாக கேதாஜினி, துவாரகா, பிரியங்கா, மபிசாந், அனிசாளினி, பவித்திரா, கேசினி, சஜானிகா, யன்சிகா, லதுஸ்கா என்னும் பேரக்குழந்தைகளையும் புதிய தலைமுறையாக வரித்துக் கொண்டார். பெண்பிள்ளை இல்லாத குறையை இவர்கள் மூலம் தீர்த்துக் கொண்டார். பேரக்குழந்தைகள் மீது அதிகம் பாசத்தை பொழிந்து வந்தார்.

இவர் பசுமையான பழங்கதைகள், சுவையான நகைச்சுவைகள், இனிமையான பாடல்கள், பக்திச்சாரல்கள் என்பவற்றை தனது பேரக்குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்வார். இவரது கூரிய ஆற்றலுக்கு இவர் கூறும் கணக்கு ரீதியான விடுகதைகளே சான்று பகிரும்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வருகை தந்த காலப்பகுதியில் இவர் "நோமல்" ரக லொறி வாகனத்தை கொள்வனவு செய்து எரு மற்றும் வைக்கோல் என்பவற்றை வன்னியில் வாங்கி வல்வட்டித்துறை, சுன்னாகம், உடுப்பிட்டி, போன்ற பகுதிகளில் விற்பனை செய்து வந்தார்.
தனது மருமகன் அமரர் உதயபாஸ்கரனை(சிறி) சாரதியாக அமர்த்தி இச்சேவையினை செய்து வந்தார். இவர் தான் உண்டு தனது வேலையுண்டு என்று வாழ்ந்து விடாது பல்வேறுபட்ட சமூக,சமயப் பணிகளை வாழ்நாளில் ஆற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப்பணி

அமரத்துவமடைந்த பொன்னு சுந்தரம் அவர்கள் தனது கிராமத்தில் பல்வேறுபட்ட பொது அமைப்புகளின் நிர்வாகங்களில் இருந்து தனது கிராமத்திற்கு தன்னலமற்ற சேவையை வழங்கியுள்ளார். விவசாய சம்மேளனம், கிராமஅபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், கிராமிய கடற்தொழிலாளர் அமைப்பு போன்றவற்றில் பல்வேறு பதவி நிலைகளில் இருந்து சேவையாற்றிய இவர் அச்சுவேலி கிராமிய கடற்தொழிலாளர் அமைப்பின் ஸ்தாபகத் தலைவராவர். மிக நீண்ட காலமாக இவர் இந்த அமைப்பில் தலைவராக இருந்து வல்லைக் கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலை மேற்கோள்ளும் முழுநேர, பகுதி நேர தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை பெற்றுக் கொடுத்துள்ளார்.

## கூட்டுறவுத்துறை

இவர் வலிகாமம் கிழக்கு வடபகுதி ப.நோ.கூ சங்கத்தின் புஸ்பவதி கிளை இல 07ல் முதன் முதலில் அங்கத்தவராக இணைந்து கொண்டார். இக் கிளையின் கிளைக்குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு சிறப்பான முறையில் செயற்பட்டு வந்துள்ளார். இவர் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினராகஇணைந்து செயற்பட்டு வந்தார். சங்கத்தின் ஆரம்ப காலங்களில் இணைந்த இவர் நிர்வாகச் சபைக்கு தெரிவு செய்யப்பட்டு சிறந்த தீர்மானங்களை எடுக்க காத்திரமான பல விடயங்களை கூறி பங்களிப்பு செய்துள்ளார். அத்துடன் சங்கத்தின் வரலாற்றுப்பதிவாக விளங்கும் தலைமை அலுவலக கட்டடம் கொள்வனவு செய்யும் போது நிர்வாக சபையில் இருந்து செயற்பட்டுள்ளார்.

தொடர்ந்து இவர் 5 1/2 ஆண்டுகள் தலைவராக இருந்து சங்கத்தின் வளர்ச்சியில் அளப்பரிய சேவையினை ஆற்றி வந்தார். வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் சமாசத்தின் நெறியாளர் சபை உறுப்பினராகவும் இருந்து சேவையினை விரிவுபடுத்தி வழங்கியுள்ளார். இவ்வாறு கூட்டுறவுத்துறைக்கு இவர் ஆற்றிய சேவையினை கௌரவித்து யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையிலும், யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திலும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயப்பணி

அமரரின் சமயப்பணியானது சிறு வயதிலிருந்தே தொடங்கியிருந்தது குல தெய்வமாகவும் தனது மூதாதையினரின் உருவாக்கத்தில் உதித்ததுமான அச்சுவேலி வடக்கு சரசாலி அருள்மிகு சித்திர வேலாயுதர் ஆலயத்தின் தொண்டுப்பணிகளை சிறுவயதில் செய்த இவர். சிறந்த பக்தி மானாகவும் விளங்கி வந்தார். இவ்வாலயத்தின் வம்சாவழி உருத்துக்காரராக விளங்கும் சுந்தரம் அவர்கள் தனது மூதாதையர்கள் எந்த நோக்கத்திற்காக இவ்வாலயத்தை உருவாக்கினார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பாடுபட்டவராவார். இவரது தீர்க்க தரிசனத்தாலும் நேர்மையினாலும் ஆலயத்தில் ஏற்பட்ட பல பிணக்குகளை சாதுரியமாக கையாண்டு தனது தெய்வீகப் பணியை சிறப்பாக செய்து வந்துள்ளார். தேர்த்திருப்பணி நிர்வாக சபையிலும் இவர் சிறப்பாக செயற்பட்டு வந்தார். கும்பாபிஷேக நிகழ்வுகளின் போதும் துல்லியமான முடிவுகளை எடுத்து செயற்பட்டு வந்துள்ளார். இவர் தந்தை வழி வந்த பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளையும், புதிய பிள்ளையார் சிலையையும் செய்து எம்பெருமான் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்து வைத்துள்ளார். கொடியேற்ற திருவிழாவின் போது தனது வீட்டிலிருந்து மேளதாளத்துடன் கொடி அழைத்து வரப்பட்டு தானே கொடியேற்றி 1ம் திருவிழாவையும் செய்து வந்தார். மரபு வழி வழிபாட்டை பேணி வரும் இவ் வாலயத்தில் மரபுரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் போராடி நீதிக்காக பாடுபட்டார். இதனால் பல இன்னல்களையும் அனுபவித்தார். எம் பெருமானின் சோதனை என்று அதனையெல்லாம் தாங்கி வந்தார்.

திருவிழா விடயங்களில் தந்தை வழி உறவுக்காரர்களையும் அவர்களது உரிமை மீறப்படாது இணைத்து செயற்பட்டு வந்தார். பங்காளர்களின் ஒத்துழைப்பாலும் தனது முயற்சியினாலும் சிறப்பான முறையில் ஆலயத்தின் திருவெண்பாவை, கொடியேற்றம், சரஸ்வதி பூஜை, ஆனி உத்தர வளந்துப்பொங்கல் என்பவற்றின் 1ம் பூஜைக்கு இவரே உபயகாரராக இருந்து செயற்பட்டு வந்தார்.


மேலும் இவர்களது இன்னுமொரு குல தெய்வமாகிய அச்சுவேலி வடக்கு படை பத்திரகாளி கோயிலுக்கு தன்னாளான ஆன் மீகப்பணியை ஆற்றி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது அம்மாவில் கலை கொண்டு எழுந்தருளும் காளி மாதேவிக்கு வருடத்தில் ஒரு நாள் கோழி பலியிடுதல் நிகழ்வு நடைபெறும் அப்போது அவற்றினை சமைத்து படையல் போட்டு அடியவர்களுக்கெல்லாம் வழங்கப்படும். இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் முன்னின்று செயற்படுவர்.

இத் தெய்வமானது தற்போது இவரது சகோதரியில் எழுந்தருள்வது யாவரும் அறிந்த விடயமாகும். சித்திர வேலாயுதர் ஆலயத்தின் வம்சாவழி உரித்துக்காரனான இவர் எச்சந்தர்ப்பத்திலும் தனது என்று உரிமை பாராட்டவில்லை அவரவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆலயம் நிறுவப்பட்டதன் நோக்கம் நிறைவேற வேண்டும் மற்றவர்களின் நிஜாயமான கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு பல்வேறு தூயசிந்தனைகளையும் நேர்மையான நடத்தையையும் கொண்டு வாழ்ந்த இவர் பிறப்பு ஒரு சம்பவம் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும் என்பதற்கு இணங்க வாழ்ந்த பொன்னு சுந்தரம் அவர்கள் தான் இறக்கப்போகின்றேன் என்பதனையும் இறப்பதற்கு முதல் நாள் நள்ளிரவில் கூறிமையானது எம் அனைவர் மனதிலும் அவரின் தீர்க்க தரிசனத்தை மீண்டும் நிறைவுபடுத்தியுள்ளது. 30.11.2019ம் திகதி மு.ப.10.50 மணியளவில் பிறப்பின் பணி முடிந்து இறைபதம் அடைந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி வடக்கு சனசமூக நிலையம்
## (கதிரொளி அறிவகம்)

# ATCHUVELY NORTH COMMUNITY CENTRE
## (KATHIROLI ARIVAKAM)

Regd No: JVC/122
Regd Date: 01.12.1947

### சேவையால் உயர்ந்த மனிதர்

எமது கிராமத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய அமரர் பொன்னுசுந்தரம் அவர்கள் எமது சனசமூக நிலையத்தின் பல்வேறு காலப்பகுதிகளில் பல்வேறுபட்ட பதவி நிலைகளில் நிர்வாக சபையில் இருந்து திறனான தீர்மானங்களை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கி செயற்பட்டு வந்துள்ளார் என்பதனை அவரது காலப்பகுதியில் நிர்வாகத்தில் இருந்த பலரும் சொல்லக் கேள்வி பட்டிருக்கிறேன் சிறுவயதில் நான் அவரை எனது சனசமூக நிலையத்திற்கு வருகை தந்து பத்திரகை வாசிப்பதையும் அங்குள்ளவருடன் உரையாடுவதனையும் அருகில் இருந்து கண்டுள்ளேன். துல்லியமான அறிவும் நிதானமான பேச்சும் அதிகம் கதைக்காத பண்பும் அவரிடத்தில் எனக்கு மதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இத்தகைய ஒரு மனிதர் தனது கிராமத்திற்கு ஆற்றக்கூடிய அதிஉச்ச சேவையை எமது கிராமத்தின் பல்வேறு அமைப்புக்களில் இணைந்து நிர்வாகத்தில் பங்கெடுத்து ஆற்றி இருப்பது எமக்கெல்லாம் முன்னுதாரணமாக இருக்கின்றது தீர்க்க தருசனம் மிக்க இவரது சிந்தனைகளும் செயல்களும் எமது கிராமத்திற்கு என்றும் மறக்கமுடியாத நினைவுகளை பறைசாற்றிக் கொண்டே இருக்கும் இவ்வாறானதொரு பெருந்தகையின் இழப்பானது ஈடு செய்ய முடியாத ஒன்றாகும் இருப்பினும் பிறப்பவர் ஒருநாள் இறப்பது நியதி அந்த வகையில் அமரத்துவம் அடைந்த பொன்னு சுந்தரம் அவர்களின் ஆத்மாசாந்தி அடைய நிலைய நிர்வாகத்தினருடன் இணைந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி

தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-டு)
JAFFNA DISTRICT PALM DEVELOPMENT CO-OPERATIVE SOCIETIES UNION (LTD)
සිමාසහිත යාපනය දිස්ත්‍රික් ඒකාබද්ධ තල් හා පොල් සංවර්ධන සමුපකාර සමිතිය

பதிவு இல./Regd. No. : J/1658
இல.52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P/FAX : 021 222 5072

பதிவுத் திகதி/Regd. Date : 12.10.1979
No.52, Somasundaram Lane,
Chundukkuli, Jaffna.
nppalmunion@gmail.com

## சங்க வரலாற்றில் தடம் பதித்தவர்
## அமரர் பொ.சுந்தரம் அவர்கள்

அமரர் பொ.சுந்தரம் அவர்கள் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர். சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த சவால்களையும், தடைகளையும் எதிர் கொண்டு செயற்படுத்தியவர்களில் இருவரும் ஒருவர் உறுப்பினராக, கிளைக்குழுத் தலைவராக, கிளைப்பொதுச்சபை உறுப்பினராக, சங்கப்பொதுச்சபை, நிர்வாகச்சபை உறுப்பினராக, தலைவராக இருந்து செயற்பட்டவர்.

ஆரம்பகாலத்தில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களாக அரச திணைக்கள அதிகாரிகளே நியமனம் செய்யப்பட்டு இருந்தனர்.

குறுகிய காலப்பகுதியின் பின்னர் சங்க உறுப்பினர்கள் ஜனநாயக முறையில் தலைவர்களாக தெரிவு செய்யும் வாய்ப்பு கிட்டியது இதன் போது அமரர் ச.தியாகராசா அவர்கள் சங்கத்தின் முதலாவது தலைவராகவும் அதன் பின்னர் அமரர் பொ.சுந்தரம் அவர்கள் இரண்டாவது தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அமரர் தியாகராசா அவர்கள் தலைவராக இருந்த காலப்பகுதியில் இவரும் இயக்குனர் சபை உறுப்பினராக இருந்தார்.

இக் காலப்பகுதியில்தான் சங்கத்திற்கென அச்சுவேலி மாநகரிலே காணிகட்டிடம் கொள்வனவு செய்யப்பட்டது.

இவர்களுடைய முற்போக்கான சிந்தனையால் இன்று பொருத்தமான இடத்தில் சங்கத்திற்கென தலைமைச் செயலகம் இயங்குகின்றது. பல ஆயிரக்கணக்காண உறுப்பினர்கள் இணைக்கப்பட்டு அவர்களின் தொழிலுக்கு கௌரவ அந்தஸ்தை வழங்கி இன்று ஒரு பாரிய சமூக நிறுவனமாக உயர்ந்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பொ.சுந்தரம் அவர்கள் 80களில் சங்கத்தின் தலைவராக இருந்து செயற்பட்ட போது சங்கங்களின் தலைமை நிறுவனமாக இயங்கும் எமது வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுச்சபைப் பிரதி நிதியாக அனுப்பப்பட்டிருந்தார். பொதுச்சபை கூட்டத்தில் சமாசத்தின் இயக்குனர் சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.


சங்கத்தினதும் சமாசத்தினதும் செயற்பாடுகளில் இவர் ஒரு சிறந்த இணைப்பாளராக இருந்து செயற்பட்டு வந்துள்ளார். சங்க அங்கத்தவர் நலன் சார்ந்த விடயங்களிலும் கருசனை கொண்டு சமாச மட்டத்திலே முன்வைத்து அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் திறமையாக செயற்பட்டார்.

இன்று எமது நிறுவனங்கள் பரந்துபட்ட அளவில் பௌதீக வளங்களுடன் உயர்ந்து நிற்கின்றது என்றால் இந் நிறுவனங்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்கள் தான். அந்த வகையில் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினதும், சமாசத்தினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அமரர் பொ.சுந்தரம் அவர்களின் பங்கும் பணியும் அளப்பரியது இதனை சங்க வரலாறு பதித்து நிக்கும்.

இல 52 சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குழி
யாழ்ப்பாணம்

P.Selvarajah
General Manager
Jaffna District
Palm Development Co-op Societies Union (Ltd)
No.52, Somasuntharam Lane,
Chundukkuli, Jaffna.

பொ.செல்வராசா
பொதுமுகாமையாளர்
யாழ் மாவட்ட ப.தெ.வ.அ.கூ.சங்.சமாசம் (வ.து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சுவேலி வடக்கு**
**கிராம அபிவிருத்திச் சங்கம்**
**ATCHUVELY NORTH**
**RURAL DEVELOPMENT SOCIETY**

பதிவுத் திகதி 28.12.2008
பதிவிலக்கம் NP/DRD/JA18/J-285/0323

Date: 24/12/2017

தலைவர் | செயலாளர் | பொருளாளர்

## சேவையினால் உயர்ந்த மனிதர்

எமது கிராமத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து அமரத்துவமடைந்த பொன்னு சுந்தரம் அவர்கள் கிராமத்தின் பல்வேறுபட்ட சமூக அமைப்புகளில் தனக்கென ஒரு முத்திரை பதித்த மனிதர் அந்த வகையில் அச்சுவேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக சபையிலும் இடம்பிடித்து கிராமத்தின் வளர்ச்சியில் அர்பணிப்புடனும் செயற்பட்டு வந்தார் பல்வேறு பட்ட அமைப்புக்களில் இருந்து செயற்பட்ட அனுபவங்களின் வாயிலாக எமது கிராம அபிவிருத்தி சங்கத்திலும் திறனான தீர்மானங்களை எடுக்க வித்திட்டவர். சுயநலமற்ற இவரது செயற்பாடுகளின் காரணமாக கிராம மக்கள் பலரதும் நன்மதிப்பை பெற்றார் பொதுவிடயங்களில் அதிகம் ஈடுபாட்டுடன் செயற்படும் பண்பாளன் இவரது தூரநோக்கு சிந்தனைகளும் நேர்மைத்தன்மையும் வறுமையிலும் இவரை செம்மையாக வாழ வைத்தது. தனது தேவைக்காக இவர் பிறரிடம் போய் நின்றதில்லை அந்தளவுக்கு சுய கௌரவம் மிக்கவர்.

எமது கிராமம் இன்று சிறந்த ஒரு சேவையாளனை இழந்திருக்கின்றது. என்றாலும் ஐந்து புத்திரர்களை அவர் தன் சேவைக்காக விட்டுச்சென்று இருக்கின்றார் என்று பெருமை கொள்வோம்.

உப தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி வடக்கு விவசாய சம்மேளனம்
# Atchuvely North Farmers Organisation

பதிவு இலக்கம் / Reg No } DAD/10/09/10 கி.சே.பிரிவு / G.S. Div } J/285

## நேர்மையின் சிகரம்

அமரர் பொன்னு சுந்தரம் அவர்கள் எமது சம்மேளனத்தின் நிர்வாக சபையில் பல பதவிகளில் இருந்து செயற்பட்டவர். இவரது அனுபவம் வாய்ந்த செயற்பாடுகளும் உறுதியான முடிவுகளும் எமது சம்மேளனத்தினுடாக விவசாயிகளுக்கு பல நலன்களை பெற்றுக்கொடுக்க உதவியாக இருந்தது.

உணவுக்கான வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்ட போது அதில் தானும் ஒரு பங்காளியாக இருந்து செயற்பட்டார்.

பல வேலைதிட்டங்களுக்கு பொறுப்பாகவும் இருந்து செயற்பட்டுள்ளார். நிதானமான தீர்மாணங்களை எடுப்பதில் வல்லவரான இவரிடம் பலர் ஆலோசனை பெற்று செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. அதிகமாக அளவளவாத இவரது பேச்சில் தெளிவும் நேர்மையும் சமயோசிதமும் நிறைந்து இருக்கும். மற்றவர்கள் அவரது கருத்துடன் முரன்படும் சந்தர்பத்தில் அப்படியா அப்படியென்றால் உனக்கு தெரிந்ததை நீ பார்த்துக்கொள் என்று நேரடியாகவே சொல்லிவடுவார். சுயமரியாதை சுயகௌரவம் என்பவற்றை இவர் எப்பொழுதும் விட்டுக்கொடுத்ததில்லை. ஆதிகம் பிடிவாதம் இருந்தாலும் அதில் நீதியும் நியாமும் நிறயப் பொதிந்திருக்கும். மொத்தத்தில் நேர்மையின் சிகரமாக திகழ்ந்த இவர் மனிதர்களுக்குள் மாணிக்கமாக திகழ்ந்தார் இவருடன் பழகும் இவரை தெரியாதவர்கள் கூட இவர் ஒரு பெரிய அறிவாளி என கூறும் அளவிற்க்கு வார்த்தையில் தெளிவும் விடயதானமும் அடங்கி இருக்கும் இவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்திர வேலாயுதரின் பாதங்களை பணிந்து வேண்டி நிற்கின்றோம்.

தலைவர் செயலாளர் பொருளாளர்
விவசாய சம்மேளனம்
வட.கி.மா./யாழ்/733/க.அ.10
அச்சுவேலி வடக்கு. அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
අච්චුවේලි තල් පොල් සංවර්ධන සමුපකාර සංගමය (සීමාසහිත)
**Atchuvely Palm Development Co-operative Society (Ltd)**
பதிவு இல./Regd No.: 1574 பதிவு திகதி/Regd Date.: 19.02.1972
பருத்தித்துறை வீதி, அச்சுவேலி.
Pointpedro Road, Atchuvely.
தொ.பே./T.P: 021 321 3566, 021 745 1901 பக்ஸ்/Fax: 021 745 1900
E.mail: Palmrural Bank @ gmail.com

## அர்ப்பணிப்பு மிக்க தலைமைத்துவ பண்பாளன் அமரர் பொன்னு சுந்தரம்

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 2வது அங்கத்துவ தலைவரும் அச்சுவேலி வடக்கை சொந்த இடமாகவும் கொண்ட பொன்னு சுந்தரம் அவர்கள் ஓர் அர்பணிப்பு மிக்க தலைமைத்துவ பண்பாளன் என்பதற்கு நான் அவரிடம் கண்டு கொண்ட விடயங்கள் நினைவு கூரத்தக்கவை.

பேச்சுத்திறன் மிக்கவர், நேர்மையாளன், பிறரை வழிப்படுத்தும் திறன் கொண்டவர், ஆலோசனை சொல்வதில் முன் நிற்பவர், சமூகப்பற்றாளன், நன்மதிப்பு மிக்கவர் இவ்வாறாக பல்வேறு வழிகளிலும் தனது தனித்துவத்தை வெளிப்படுத்தியவர் பொன்னு சுந்தரம் அவர்கள்.

இவர் தொழில் செய்வதற்கு நாவற்காடு கிராமத்தில் சில பகுதிகளையே நீண்ட காலமாக பயன்படுத்தி வந்தார் இதற்கு காரணம் நாவற்காடு வாழ் மக்கள் இவர் மீது கொண்ட நம்பிக்கையே என்றால் மிகையாகாது. குறிப்பாக நான் வளர்ந்து வந்த பிரதேசத்தில் வட்டு மருத்தை காந்தி என்றால் தான் தெரியும் பெரும்பாலானவர்கள் இவரை காந்தி அண்ணன் என்றே அழைப்பர்.

அப்பர் கணபதிப்பிள்ளை காயாம்பு பொன்னு சுந்தரம் ஆகிய இவர்கள் எமது கிராமத்திற்கு தொழில் முயற்சிக்காக அயல் கிராமத்தில் இருந்து வந்த போதும் சுந்தரம் அவர்கள் மிகவும் கருணை உள்ளவர் என்பதை நான் சிறியவனாக இருந்தபோது கண்டதுண்டு. பின்னாளில் நான் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் பணிக்கு சேர்ந்த பின் நான் சிறுவனாக இருந்த போது எமது வீட்டிற்கு தொழில் நிமித்தம் வந்த சுந்தரம் எனும் பெரும் மனிதனுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்தது. அப்போதுதான் இவரின் சமூகப்பொறுப்பு எனக்கு தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் ஆரம்பித்து சில வருடங்களிலேயே பொன்னு சுந்தரம் அவர்கள் தலைவராக தெரிவு செய்யபட்டதும் தொடர்ந்து பல ஆண்டுகள் தலைமை பொறுப்பில் இருந்தவர் என்பதும் அமரர் ச.தியாகராசா அவர்களின் தலைமையின் கீழ் 1983களில் நிர்வாக சபையாக சுந்தரம் அவர்கள் இருக்கும் போது சங்கத்திற்கு சொந்தமாக காணி கட்டடம் கொள்வனவு செய்யபட்டதும் சங்க வரலாற்றில் பிரதான விடயமாகும். தலைமைத்துவ பண்பாளர் என்பதற்கு இவர் பல்வேறு அமைப்புகளில் தலைவராக செயலாளராக பொருளாளராக இருந்து செயற்பட்டு வந்தார் என்பதை பிறர் சொல்லி கேட்டதுண்டு. சங்கத்தின் முதலாவது பொது முகாமையாளரான குருநாதி கணேசன் அவர்கள்(தற்போது கனடாவில் வசிக்கின்றார்) அண்மையில் சங்கத்திற்கு வருகை தந்தபோது அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் உருவாகிய காலத்து நினைவுகளை மீட்டுள்ளபோது பலரது பெயர்களை குறிப்பிட்டு கதைத்தார். ஆனால் தலைவர் சுந்தரம் அவர்களை பல தடவை கூறினார் நான் எனது குறும்புத்தனத்துடன் ஏன் சுந்தரம் அவர்களை பலதடவை கேட்கின்றீர்கள் எனக் கேட்டேன். திரு.கு.கணேசன் அவர்கள் சொன்ன விடயம் கூ.மாணிக்கம் மயிலு ஆறுமுகம் சுந்தரம் இவர்கள் எமது சங்கம் ஆரம்பித்த காலத்தில் சங்க எதிர்ப்பாளர்களை எதிர் கொண்ட உன்னதமானவர்கள் இவர்களில் காந்தி (பொ.சுந்தரம்) தனது "A40 ரக காரை" சங்க வாகனம் போன்று பயன்படுத்தினார்.

அண்மைக் காலங்களில் எனது சக பணியாளரான சுந்தரம் ஸ்ரீகாந் அவர்களுடன் நான் அவரின் வீட்டிற்கு செல்லும்போது அமரர் சுந்தரம் அவர்களுடன் கதைக்கும் வாய்ப்பு கிடைத்தது.

எப்போது சந்தித்தாலும் சங்கம் எப்படி போகுதென கேட்பதுடன் சங்கத்தின் தொழிற்பாடு தொடர்பாக மிகவும் கரிசனையுடன் கேட்டறிவார். நல்ல பல புத்திமதிகளை எனக்கு கூறுவார். இதில் இருந்து நான் அமரர் சுந்தரம் அவர்கள் எமது சங்கம் மீது கொண்ட பற்றினையும் நன்கறிவேன்.

50 ஆண்டுகள் நிறைவை எட்ட உள்ள இவ்வேளையில் அச்சுவேலி கூட்டுறவு சங்கமானது பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் அவரவர் கருமமே கட்டளைக்கண் எனும் வள்ளுவன் வாக்கிற்கு அமைவாக சங்கத்தின் தோற்றத்திற்கும் ஏற்றத்திற்கும் பெருமைமிகு கருமமாற்றிய அமரர் பொன்னு சுந்தரம் அவர்களையும் அவர் போன்ற மற்றவர்களையும் தனது வரலாற்றில் சேர்த்துக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

கி.வரதராசன்
பொதுமுகாமையாளர்
அச்சுவேலி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி கிராமிய கடற்தொழிலாளர் அமைப்பு
# Atchuvely Rural Marine Labor Organization

## ஆளுமை மிக்க தலைவர்

அமரர் பொன்னு சுந்தரம் அவர்கள் எமது கடற்தொழிலாளர் அமைப்பின் ஸ்தாபகத் தலைவராகும், இக் கிராமங்களில் “கண்டி முறையிலான” மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு அரச உதவிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு, தனது அனுபவங்களின் ஊடாக அமைப்பு ரீதியாக இயங்குவதன் மூலமே இது சாத்தியமாகும் என்பதனை முன்னுணர்ந்து கிராம மக்களுடன் தனது கருத்துக்களை விதைத்து அனைவரதும் ஒத்துழைப்பைப் பெற்று அச்சுவேலி கிராமிய கடற்தொழிலாளர் அமைப்பை நிறுவினார்.

கடற்தொழில் நீரியல் வள உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு இப் பகுதியில் கடற்தொழில் செய்யும் தொழிலாளர்க்கு பல வசதிகளையும் உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

இவரது சமூகப்பற்றும், நேர்மைத்தன்மையும் இவர் நடமாடித்திரியும் காலத்தில் மிக நீண்ட காலம் வரை இந் நிறுவனத்தின் தலைவராக அவரை நிலை நிறுத்தியது. இவருக்கு பிறகு இவரது மகன் இமயகாந் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொதுச் சேவையானது இவரதும் இவரது குடும்பத்தினரினதும் இரத்தத்தில் ஊறிய ஒன்றாகும். வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு ஏதாவது உதவ வேண்டும் என்கின்ற சிந்தனையுடைய அமரர் ஒரு விடயத்தை முன்னெடுக்கும் போது பின்னால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு ஏற்ப செயற்படும் திறமை மிக்கவர்.

இவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் பெறுமதிமிக்கவையாகும்.

எமது மண்ணின் பெறுமதி மிக்க ஒரு மனிதர் இவ்வுலகை விட்டு மண்ணுலகம் சென்றாலும் அவருடைய சேவைகளை எமது மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள் என்பது திண்ணம் அவ் வகையில் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

செயலாளர்
அச்சுவேலி கிராமிய
கடற்தொழிலாளர் அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்க தரிசி

அமரர் பொன்னு சுந்தரம் அவர்களின் இறைபதச் செய்தி கேட்டு மிகவும் மன வேதனையும் கவலையும் அடைந்தோம். நாகர் பரம்பரையின் மூத்த ஆளுமை மிக்க ஒருவராக இருந்து நாகர் பரம்பரையினர்க்கு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வந்தவர். சித்திர வேலயாயுதர் ஆலய வளர்ச்சிக்கும் ஆலய உருத்திற்க்கும் பெரும் பங்காற்றியவர் ஆவார். இவரின் மறைவு நாகர் பரம்பரையினருக்கு பேரிழப்பாகும்.

ஆலயம் சம்பந்தமாக பல காலகட்டங்களில் பல பிரச்சனைகள் வந்தபோதெல்லாம் முன்னின்று உண்மைகளை விளக்கி நீதிக்காக பாடுபட்டு உரிமைகள் நிலை நாட்டப் பெரும் பங்காற்றியவர்.
இவர் நாகர் பரம்பரையின் உண்மையான முழு வரலாற்று அறிவையும் வழித்தோன்றல்களையும் பூரணமாக அறிந்தவர் என்பதனால் எல்லோருக்கும் வரலாற்றுப் பதிவை தந்து முன்மாதிரியாக வழி காட்டினார்.
எமது ஆலயத்திற்கு சித்திரத்தேர் அமைக்கும் தேர்த்திருப்பணி சபையில் நான் செயலாளராக இருந்த போது என்னுடன் அமரரும் நிர்வாக சபையில் இருந்து செயற்பட்டார். தேர் வெள்ளோட்டத்தின் போது வெளியிடப்பட்ட மலரானது இவரது அர்ப்பணிப்பான தெய்வீக சேவையினை பறைசாற்றி நிற்கின்றது.

இவரின் ஆலய சேவையைப் போன்று பல பொது நிறுவனங்கள் திணைக்களங்களிலும் முகாமைத்துவ தலைவராக, நிர்வாகியாக பணியாற்றி நன்மதிப்பை பெற்றவர் ஆவார். இவரின் தீர்க்க தரிசனமான அறிவுரைகளினால் பலராலும் பாராட்டுப் பெற்றுள்ளார். இவரின் நேர்கொண்ட பார்வையும், பயணமும், சமூகத்தினர்க்கும் நாகர் வாரிசுகளுக்கும் இனிமேல் கிடைக்க மாட்டாது என்பது யாவருக்கும் பெரும் கவலையாகும். ஆலயம் சம்மந்தமாக நீதியானதும் நிலையானதும் ஆன நல்ல தீர்வுக்காக காத்திருக்கும் இவ்வேளையில் இவர் மறைந்து விட்டார். அவரின் கனவையும் நனவையும் முழுமையாக நிறைவேற்றி நீதி நிலை நாட்டப் பாடுபடுவோம்.

அன்னாரின் இளைப்பாற துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு சித்திரவேற் பெருமான் நல்வாசிகள் வழங்க பிரார்த்திப்போமாக..

சுபம்

நாகமுத்து
2ம் திருவிழா
உபயகாரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூப்புனித நீராட்டு விழா

ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்து தாய்க்குத் தகுதி உடையவளாக மாறும் நாள், **பூப்படைதல்** என்றும் சொல்லப்படும். பெரும்பாலும் 9 வயது முதல் 12 வயதிற்குள் பூப்படைதல் பெண் குழந்தைக்கு ஏற்பட்ட பின்னரே பரிபூரணமான பெண்ணாகிறாள்.

## நீராட்டல்

பெண் பூப்படைந்தவுடன் முற்காலத்தில் கிணற்றடியில் காய்ந்த இலைகளின் மேல் இருத்தி, தாய் மாமன் தேங்காய் உடைக்க, மாமி தண்ணீர் ஊற்றி நீராட்டுவார்கள். கிணற்றடி பொது இடம் பெண்ணில் இருந்து வெளிப்படும் தீட்டு பிறர் கண்ணிற் படாது குப்பைக்குள் மறைந்து விடும் என்பதால் காய்ந்த இலைகளின் மேல் இருத்தி நீராட்டுவார்கள். இக்கால கட்டத்தில் பெண்ணைக் குளியலறையில் மாமியார் நீராட்டலாம். பின்பு பெண்ணுக்கு வெள்ளை ஆடை அணிந்து தாய் மாமனிடம் ஆசீர்வாதம் பெற்ற பின் ஒரு தனியறையில் பெண்ணை விட வேண்டும். அவ்வறையில் வேப்பிலையும் காம்புச்சத்தகமும் இருப்பிடத்தின் மேல் சொருகி விடுவார். பெண் பூப்படைந்த போது அணிந்திருந்த ஆடையினை குடும்பச் சலவை தொழிலாளிக்குக் கொடுப்பதே மரபாகும். தீட்டுக்கழியும் வரை மாற்றுடுப்புகளை வழங்க வேண்டிய பொறுப்பும் அவரையே சார்ந்துள்ளது. அழுக்கடைந்த சேலையை கட்டாடியார் எடுத்துச் சென்று சிறுமி பூப்படைந்து விட்டாள் என்பதைக் கட்டாடியார் உறுதிப்படுத்துவார். அவ்விடத்தில் உள்ள அனைவருக்கும் மூன்று நாட்கள் தீட்டுதுடக்கு ஆகையால் அதை நிவர்த்தி செய்வதற்கு அந்தனரை அழைத்து புண்ணியவாசம் செய்வர் இதை (5ம் 7ம் நாட்களிலும் செய்யலாம்) முன்பு கிராமப்புரங்களில் பூப்பெய்தி 4ம் நாள் பசும்பால் வைத்து நீராட்டித் தீட்டுத் துடக்கை போக்குவார்கள்.

## உணவு முறைகள்

முதல் மூன்று நாட்களும் பச்சையரிசி சாதமும், கத்தரிக்காய் பால் கறியும் கொடுத்தல் வேண்டும். மூன்று நாட்களின் பின் அதிகாலை ஒரு பச்சை முட்டை குடிக்க கொடுக்கும் போது, அதன் அளவு நல்லெண்ணையும் முட்டைக் கோதுக்குள் விட்டுக்கொடுக்க வேண்டும். பின்பு காலை உழுத்தங்கழி, மதியம் சோறு கறி, கத்தரிக்காய் பொறியலும் கொடுக்கலாம். பால் விடாது காலை, மாலை கோப்பி கொடுக்கலாம். இரவு இடியப்பம் கொடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இலகுவாக ஜீரனிக்கக் கூடிய போசாக்கான சத்துள்ள உணவுகளைக் கொடுக்க வேண்டும். முக்கியமான அனைத்து உணவுகளிலும் உழுந்தும் நல்லெண்ணையும் மிகுதியாக சேர்க்க வேண்டும். அத்துடன் காலையில் (வேப்பிலை 10. மிளகு 3, விரல்பிடி சின்ன சீரகம், 2 உள்ளிப் பல், சிறு துண்டு மஞ்சளும் இஞ்சியும்) இவற்றை அரைத்துக் குளிசைகளாக்கி 3 நாட்களுக்கு விழுங்க கொடுப்பது உடலுக்கு நல்லது.

## சாமர்த்தியச் சடங்கு

சடங்கு செய்வதற்கு சுப நாளில் ஒன்றை தெரிவு செய்து (5,7,9,11,13) நாட்களின் பின் செய்யலாம். அன்று பருவமடைந்த பெண்ணின் இரண்டு கைகளிலும் ஒவ்வொரு வெற்றிலைக்குள் பாக்கும் சில்லறைக் காசும் வைத்துச் சுருட்டிக் கொடுத்து, தலையில் வெள்ளைத் துணியில் முகத்திரை இட்டு (அபச குணங்களைப் பார்க்காமல் இருப்பதற்கு) மாமியார் பால் அறுகு வைக்கும் இடத்திற்கு அழைத்து வந்து கிழக்கு அல்லது வடக்கு நோக்கி பார்க்கக் கூடியதாக பாயின் மேலோ அல்லது ஒரு பலகைக் குற்றியின் மேலோ, ஒரு வெள்ளைத் துண்டை இட்டு, பருவமடைந்த பெண்ணை உட்கார வைக்க வேண்டும். இச் சடங்கில் தாய் மாமன், மாமிக்குத் தான் முக்கிய இடம் அளிக்கப்படும். பெண்ணை நிறைகுடம் குத்துவிளக்கை பார்க்கும் படி பெண்ணுக்குக் கூறி முகத்திரையை விலக்கி விட்டு அதன் பின் கற்பூரம் ஏற்றி பிள்ளையாரைத் துதித்து, எடுத்த காரியம் இனிதே நிறைவேற வேண்டும் என்று நினைத்து வணங்க வேண்டும். தாய் மாமன் தேங்காய் உடைப்பார். பின் பால் அறுகு இருக்கும் இடத்தில் காசு போட்டு, மாமியார் இரு கைகளினாலும் எடுத்து ஆசிர்வதித்து, தலையிலே வைப்பார். அதை தொடர்ந்து ஐந்து பேர் அல்லது ஏழு பேர் என ஒற்றை எண்ணிக்கையானவர்கள் பாலறுகு வைப்பர். பாலறுகு வைத்து முடிந்ததும் பெண்ணை நீராட்டும் இடத்திற்கு கொண்டு சென்று, அங்கும் கிழக்கு அல்லது வடக்கு முகமாகப் பெண்ணை இருத்தி, முதலில் தாய்மாமன் தலையிலே தண்ணீரை ஊற்றுவார். அதனை தொடர்ந்து ஏனையவர்களும் ஊற்றுவர். பெண்ணுக்கு மஞ்சள் பூசி நன்கு நீராட்டி , திரும்பவும் தலையைத் துணி கொண்டு மூடி அழைத்து வந்து சுடர்விட்டு பிரகாசிக்கும் குத்துவிளக்கில் தரிக்க விடுவர். பின்னர் பெண்ணை அலங்காரம் செய்து, தாய்மாமன் பெண்ணின் கையில் கும்பம் (நீர் நிரப்பிய செம்பு, தேங்காய், வேப்பிலைக் கொத்து, மாவிலை) கொடுப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிப் பெண்கள் ஆரத்திப் பொருட்களுடன் பெண்ணை அழைத்துக் கொண்டு மணவறை நோக்கிச் செல்வர். ஆங்கு ஆரத்தித் தட்டங்களை வரிசையாக வைப்பர் பின்னர் சுமங்கலிப் பெண்கள் இருவர். எதிரெதிராக நின்று கொண்டு ஒவ்வொரு தட்டங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று முறை வலது தோழால் உயர்தி ஆரத்தி எடுத்து பின்பு சிறசை மூன்று முறை சுற்றி. அதை பின்னுக்குக் கொடுத்து கண்ணூறு கழிப்பார்கள். பின்பு கடைசியாக வேப்பமிலை, பால் ரொட்டியில் ஆரத்தி எடுத்து பெண்ணை வேப்பமிலையால் சுற்றி தடவி பால் ரொட்டியை உடைத்து நாலு பக்கமும் எறிந்து வேப்பமிலையால் தலையை சுற்றி பெண்ணை வேப்பிலையை மென்று துப்பச் செய்த பின்னர் வாழைப்பழம் ஆரத்தி எடுப்பர். (ஆரத்திக்குறிய தட்டங்களின் ஒழுங்கு இடத்திற்கு இடம் மாற்றமடையும். ஆனால் எப்பவும் நிறைநாழி முதலாவதாகவும் வேப்பிலை வெள்ரொட்டித்தட்டம் இறுதியாகவும் செய்ய வேண்டும். அதன் பின் வாழைப்பழ ஆரத்தி எடுத்து நிறைவு செய்தல் வேண்டும். பொதுவாக பெண்ணின் தாயார் ஆரத்தி எடுப்பதில்லை. பெற்றோர் ஆண்டாள் மாலையை பெண்ணின் கழுத்தில் இட ஆண்டாள் மாலை அனிவது பெண்ணை பாவையாகக் கருதுவதால் பெண்ணின் முகம் இருக்கும். நிறை குடத்தை தாய் மாமனும் குத்து விளக்கை மாமியாரும் எடுத்துக் கொண்டு பூஜை அறையினுள் சென்று வைப்பர். தாய்மாமன் பெண்ணின் கையிலிருக்கும் செம்பை வாங்கி பூஜை அறையில் வைப்பர். (இம்முறை வீட்டில் மங்களம் செய்வோருக்கு பொருந்தும்) பூஜை அறையில் தூப தீபம் காட்டி வழிபட்டு, பெண் பெற்றோரினதும், மாமன் மாமியினதும் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறுவாள். பின்பு சடங்கிற் பங்கு பற்றியவர்களும் பெண்ணை வாழ்த்தி தம்மால் இயன்றவற்றை கொடுப்பர். அதன் பின் விருந்தினர்களை மதிய போசன விருந்தளித்து உபசரிப்பர்.

## ஆரத்தி எடுக்கும் முறை

ருது சாந்தியின் போது எடுக்கும் ஆரத்தி, மூன்று முறை மேலும் கீழுமாக சுற்றி பின் பெண்ணின் தலைக்குமேல் மூன்று முறை சுற்றி பின் புறம் கொடுக்க வேண்டும். (நிறை நாளியும், பன்னீர்த்தட்டமும் முன்னுக்கு வைக்க வேண்டும். உணவுத் தட்டங்களை தலைக்கு மேல் சுற்றி பின் புறமாக கொடுக்க வேண்டும்). பூந்தட்டால் ஆரத்தி எடுத்த பின், பூக்களை பெண் மேல் தூவி விட வேண்டும். பின் இந்த உணவு பண்டங்களை கட்டிக் கட்டாடியிடம் கொடுத்து விட வேண்டும். அல்லது ஆற்றிலோ கடலிலோ சேர்த்து விடலாம். இன்றைய நிலையில் ஏழைகளுக்கு கொடுத்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் சாதம்

பச்சை அரிசிக்குள் தேங்காய் பாலும் நீரும் சிறிது உப்புமிட்டு சாதமாக அவித்து மூன்று தளிசைகளாகத் தட்டில் வைக்கவும்.

## பிட்டு

வழமை போல் வறுத்த உழுத்தமா, அரிசிமா கலந்து செய்த பிட்டை நீற்றுப் பெட்டியில் மும் முறை அவித்து தட்டத்தில் வைக்கவும்.

## களி

வறுத்த அரிசிமா ஒரு சுண்டு, வறுத்த உழுத்தமா அரைச் சுண்டு, தேங்காய்ப் பால் மூன்று சுண்டு, பனங்கட்டி முக்கால் சுண்டு, உப்பு விரற்பிடியளவு, தேங்காய் பாலைக் காய்ச்சி(உழுத்தமா, அரிசிமா, உப்பு, தூளாக்கிய பனங்கட்டி) எல்லாவற்றையும் கலந்து பாலின் மேல் தூவி கட்டி படாமல் கிளறி எடுக்கவும், மூன்று தளிசைகளாக தட்டத்தில் வைக்கவும்.

## வெள்றொட்டி (பால்றொட்டி)

ஒரு சுண்டு பச்சை அரிசியை கழுவி ஊர வைத்து இடித்து கால் சுண்டு கப்பிமா எடுக்கவும். மிகுதியை மாவாக்கவும். இரண்டையும் கலந்து அரைத்தேக்கரண்டி உப்பு சேர்க்கவும். ஒரு தேங்காயைத் துருவி முதற்பால் எடுத்துக் காய்ச்சி மாவில் ஊற்றி இறுக்கமாக கையில் ஒட்டாத பதத்திற்கு குழைக்கவும். அரை மணித்தியாலம் விட்டு ஒரு வாழையிலையில் எண்ணை தடவி மாவை சிறு சிறு உருண்டைகளாக தட்டி எண்ணெய்யில் பொரிக்கவும். இது பூரி போல் பொங்க வேண்டும்

## ஆரத்திப் பொருட்கள்

நிறைநாளி (நிறைநாளிக் கொத்தில் நெல்லை நிரப்பி அதில் காம்புச்சத்தகத்தை நிற்க வைத்து நுனிக்காம்பில் ஒரு வெற்றிலையைச் சொருகி வைக்க வேண்டும்) பிட்டு, களி, பால்சாதம், சோறுகறி, தேங்காய்த்தட்டம் (முடியுடன் கூடிய மூன்று தேங்காய்களை மஞ்சள் நீர் கொண்டு கழுவித் தட்டில் வைக்க வேண்டும்) பழங்கள், பலகாரம், பன்னீர்த்தட்டம், வெற்றிலை, பாக்கு, எலுமிச்சை, பூந்தட்டு, வெள்றொட்டி, வேப்பிலை ஆரத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் மாதங்கள்

| தமிழ் மாதம் | தமிழ் திகதி | நேரம் |
|---|---|---|
| சித்திரை | 10 | மு.ப. 7.00 முதல் மு.ப. 8.30 வரை |
| வைகாசி | 21 | மு.ப. 9.12 முதல் மு.ப. 10.42 வரை |
| ஆடி | 11 | மு.ப. 6.48 முதல் மு.ப. 8.18 வரை |
| ஆவணி | 6 | மு.ப. 2.24 முதல் பி.ப. 3.54 வரை |
| ஐப்பசி 1 | 11 | மு.ப. 6.48 முதல் பி.ப. 8.18 வரை |
| கார்த்திகை | 8 | மு.ப. 10.00 முதல் பி.ப. 11.30 வரை |
| தை | 12 | மு.ப. 9.12 முதல் பி.ப. 10.42 வரை |
| மாசி | 22 | மு.ப. 9.12 முதல் பி.ப. 10.42 வரை |

*வீடு இந் நாட்களில் கிரகாரம்பம் செய்வது உத்தமம்

## வீடு குடிபுகும் போது கோயிலில் இருந்து கொண்டு செல்லும் பொருட்கள்

01. குத்து விளக்கு
02. நிறைகுடம்
03. படங்கள் - பிள்ளையார், லஷ்மி, முருகன்
    (அவசியம் தேவையான படங்கள்)
04. முகம் பார்க்கும் கண்ணாடி
05. பூமாலையுடன் கூடிய அர்ச்சனை தட்டம்
06. படங்களுக்குரிய பட்டுக்கள்
07. நிறைநாளி
08. கற்கண்டு
09. பணப்பெட்டி (இதற்குள் நெல் பரவி, பட்டுத்துணி, நாணயம், மஞ்சள் துண்டு வைக்கவும்)
10. 3 செத்தல் தேங்காய் (தோலுடன் உள்ளது)
11. 3 மஞ்சள் பூசிய தேங்காய்கள்
12. ஒரு சிறிய தென்னங்கன்று
13. ஒரு புதிய மண் சட்டியில் உப்பு
14. புதுச் சட்டியில் முழு மஞ்சள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் காய்ச்ச தேவையானது


வாழையிலை, பொங்கற் பாத்திரம், கரண்டி, பால் காய்ச்சும் பாத்திரம், மாவிலை, சந்தனம், குங்குமம், விபூதி, பூமாலை, பூக்கள், அறுகம்புல், பால்

## வாஸ்து சாந்தி

வீடு குடிபுகும் போது செய்யும் சாந்திகளில் இதுவும் ஒன்று. அசுத்தமான பூமியை அக்கினியில் தகித்துச் சுத்தமாகச் செய்யும் சாந்தியே வாஸ்து சாந்தியாகும். இச் சாந்தியின் போது விக்கினேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம் செய்து வாஸ்து புருஷனையும், பிறதேவதைகளைப் பூசித்து அக்கினி காரியம் செய்வர். இதற்கு நீற்றுப் பூசனிக்காய் ஒன்றைப் பலியிடுவர். அதன் பின் வைக்கோல் தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்டு வாஸ்து புருஷனைப் பூசித்து, அக்கினியில் எரி மூளச் செய்து வீடு, வீதீ முதலிய இடங்களில் இழுத்து வருவர். பின் இதற்குக் கும்ப நீர் தெளித்து விடுவர். இச் சாந்தியின் பின் கை கால்களைச் சுத்தம் செய்து தான் மற்றக் கிரியைகளைச் செய்ய வேண்டும்.

## வீடு குடிபுகும் போது செய்யும் ஹோமங்களுக்குரிய பொருட்கள்

- அரிசி மா, மஞ்சள் மா, எள்ளு, நவதானியம், நெற்பொரி
- ஓமச்சாமான், மருந்துச்சாமான். (தமிழ் மருந்துக் கடைகளில கிடைக்கும்)
- சமித்துக்கட்டு, நெய், ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி,
- அத்தர், அரிசி, தேங்காய்
- 
- 
- மாவிலை, தலைவாழையிலை, அறுகம்புல்
- நாயுருவி, தாமரைப்பூ, பூமாலை, பூச்சரம்
- வெற்றிலை, பாக்கு, பழவகைகள்,
- நீற்றுப்பூசணி
- வைக்கேற்கட்டு
- குடும்பத்துப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 45) மனித மூளை



1. மூளையானது ஒன்றரை கிலோ எடையுள்ள ஒரு பகுதியாகும்.
2. இது வெள்ளை மற்றும் சாம்பல் நிற திசுக்களின் இருப்பிடமாகும்.
3. ஐம்புலன்களின் செயற்பாட்டை தீர்மானிக்கிறது.
4. மனிதனின் கோபதாபங்களை மூளையே தீர்மானிக்கிறது.
5. மனிதனது சந்தர்ப்பத்திற்கு தேவையான தகவல்களை மட்டும் அவதானிக்கின்றது.
6. மனிதனின் சமநிலையைப் பேணுவதில் முக்கிய பங்காற்றுகிறது.
7. ஒன்றின் ஆபத்தை மூளையே நமக்கு உணர்விக்கிறது.
8. முதல் நடந்த துன்பம் மீண்டும் ஏற்படாமல் தடுக்க நினைக்கிறது.
9. எல்லா நோய்களும் மூளையினாலேயே உணரப்படுகிறது.
10. ஆனால் மூளையானது எந்த உணர்வும் அற்றதாகும்.
11. ஒருவர் விழித்துக் கொண்டிருக்கும் போதே இரண சிகிச்சை மேற் கொள்ளப்படுகிறது.
12. வாழ்க்கை முழுவதற்குமான நினைவுசக்தியை தருகிறது.
13. மூளை நிரந்தரமான நினைவு சக்தியை கொண்டுள்ளது.
14. இது ஏறத்தாழ அறுபதாயிரம் நரம்பு செல்களின் இணைப்பாக உள்ளது.
15. மூளையானது மணிக்கு முந்நூற்று நாற்பது கிலோ மீற்றர் வேகத்தில் சைகையினை அனுப்புகிறது.
16. மூளை வலது, இடது அரைக்கோளத்தைக் கொண்டது.
17. வலது அரைக்கோளம் உடலின் இடது பகுதியை செயற்படுத்தும்.
18. இடது அரைக்கோளம் உடலின் வலது பகுதியை செயற்படுத்தும்.
19. ஒருவரின் உடலின் இரண்டு சதவீதமே மூளையாகும்.
20. மூளையானது சதை வளர்ச்சி, அடிப்படுதல், மூளைக்காயம் என்பனவற்றால் பாதிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49) சூரியன்



1. உலகிலேயே மிக முக்கியமான பொருள் சூரியனாகும்.
2. இது கோள்களிலே மிக முக்கியமானதாகும்.
3. சூரியனை பூமி சுற்றுகிறது.
4. சூரியன் ஒரு நெருப்புப் பந்தாக காட்சி தருகிறது.
5. எமக்கு ஒளி கொடுப்பதில் சூரியன் முக்கியப்பங்காற்றுகின்றது.
6. ஒன்றுக்கு மேற்பட்ட சூரியன் அண்டவெளியில் இருப்பதாக கூறப்படுகிறது.
7. சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைவான்.
8. உலக தேவைக்கு மிக முக்கியமானது சூரியனாகும்.
9. எமக்கு சூரியனே விடியலை சொல்லித் தருகிறது.
10. உலகத்தில் சரியான இயக்கத்திற்கு சூரியன் அவசியமாகும்.
11. மரங்களின் ஒளித்தொகுப்பு செயற்பாட்டிற்கு சூரியன் அவசியமாகிறது.
12. மழைவீழ்ச்சிக்கு காரண கருத்தாவாக சூரியன் விளங்குகிறது.
13. உடலின் சரியான தொழிற்பாட்டிற்கு வெப்பம் அவசியமாகிறது.
14. சூரியனின் பொருத்தமான வெப்பத்தாலேயே உலகம் நகர்கிறது.
15. சூரியன் இல்லையேல் நீர் பனிக்கட்டியாக மாறிவிடும்.
16. குளிர் சூழலானது மிகவும் அதிகரிக்கும்.
17. உயிர் வாழ்வதற்கு பொருத்தமற்ற இடமாக மாறிவிடும்.
18. சூரியனை நம்பியே சில உற்பத்திகள் இடம் பெறுகின்றன.
19. உயிரினங்கள் உயிர் வாழ சூரியன் அவசியப்படுகிறது.
20. முழுமையாக நோக்கினால் சூரியனாலேயே இந்த உலகம் இயங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47) வானொலி




1. தொலைத் தொடர்பை மேற்கொள்வதில் வானொலி முக்கிய இடம் பெறுகிறது.
2. இது 1806 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.
3. வானொலியைக் கண்டு பிடித்தவர் மார்க்கோணியாவார்.
4. காற்றலைகள் மூலம் தகவல்களை கிடைக்கச் செய்தார்.
5. தூரத்தில் பேசும் விடயங்களை தன் அருகே கொண்டு வருகிறது.
6. காதால் கேட்டு இனிமை அடைய வானொலி முக்கியமாகிறது.
7. ஆரம்பத்தில் ஒரு சில வீடுகளிலேயே பயன்படுத்தப்பட்டது.
8. இன்று வானொலியானது கைத்தொலைப்பேசி தொடக்கம் கணினி வரை இயங்குகின்றது.
9. முக்கிய பிரமுகர்களை நமக்கு அறிமுகம் செய்கிறது.
10. ஆரம்பத்தில் ஒரு சில மணித்தியாலங்களே சேவை இடம்பெற்றது.
11. இன்று 24 மணிநேர சேவைகளும் இடம் பெறுகின்றன.
12. இனிமையான பாடல்களை வானொலி தருகிறது.
13. வானொலி செய்தி அறிக்கைகளை எமக்கு தருகிறது.
14. அறிவு சம்பந்தமான நாடகங்களை எமக்கு அளிக்கிறது.
15. விளையாட்டுத் தகவல்களை எமக்கு துல்லியமாக வழங்குகின்றது.
16. நாம் வெளிநாட்டு விடயங்களை அறிந்து கொள்கிறோம்.
17. தகவல் உடனடியாக பெறக் கூடியதாக உள்ளது.
18. ஆரம்பகாலங்களில் மின்கலத்தினூடாக இயங்கியது.
19. இன்று மின்சாரம் மூலம் இயங்கும் வானொலிகளே அதிகமாக உள்ளன.
20. புதிய தொழில் நுட்பத்துடன் இயங்கும் வானொலிகளும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்


## பொன்னு சுந்தரம் (காந்திமாமா)



உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அமரர்கள் கிருஷ்ணர் பவனம் குடும்பத்தினர்.
அச்சுவேலி வடக்கு அச்சுவேலி.

# விழிநீர் சொரிகின்றோம்



அமரர்

## பொன்னு சுந்தரம் (காந்தி)

தோற்றம் - 1938. 06. 08

மறைவு - 2019. 11. 30

" நாங்கள் வாழும் காலமெல்லாம்
வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்
"கல்லறையில் அல்ல... எங்கள் இதயங்களில்...."

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

**உறவினர்கள்**

அச்சுவேலி வடக்கு அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

காந்தன், விசயன், கண்ணன், ருத்ரன், ரஜனி ஆகியோரின்
பாசமிகு தந்தையாரும், அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவருமான

அமரர்

## பொன்னு சுந்தரம் (காந்தி)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1938 | 2019 |
| 06 | 11 |
| 08 | 30 |

உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
அன்ரனிசுகிர்தன், டெனிசியா

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08.06.1938

மறைவு 30.11.2019

எமது சங்கத்தின் ஆரம்ப காலத் தலைவரும்
பணியாளருமான சு.ஸ்ரீகாந் அவர்களின் தந்தையுமான
அமரர் பொன்னு சுந்தரம் அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

அமரர்

## திரு. பொன்னு சுந்தரம்

(முன்னாள் தலைவர்
அச்சுவேலி ப.தெ.வ.அ கூட்டுறவுச் சங்கம்)

அன்னாரின் பிரிவால் துயருறும்
பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்கள்
(அச்சுவேலி ப.தெ.வ.அ கூட்டுறவுச்சங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 08 06 1938

இறப்பு 30 11 2019

## அமரர்-திரு.பொன்னு-சுந்தரம்.

(எமது ஆலய ஸ்தாபகர் - ஸ்தாபித்த திரு. கோ.நாகர் ஐயா அவர்களின் வழித்தோன்றலாகிய)

எமது ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் கொடியேற்றத் திருவிழாவான முதலாம்

திருவிழாவினையும், கொடியிறக்கத் திருவிழாவினையும், நவராத்திரியின் முதலாம்

நாள், திருவெம்பாவையின் முதலாம் நாள் உற்சவம், ஆனி உத்தர பொங்கல்(பிள்ளையார்) என்பவற்றின்

உபயங்களை மிகச் சிறப்பாக செய்து உதவி வருபவரும், ஆலய

புனரமைப்பில் பொது பிள்ளையார் ஆலயத்தினையும் அமைத்து, ஆலய வளர்ச்சியில் பல வழிகளிலும்

உதவி செய்து வந்த திரு.பொ.சுந்தரம் அவர்கள் இயற்கை

எய்தியமையினை அறிந்து மிகவும் வேதனையடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும்

குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா

சாந்தியடைய எம் பெருமான் ஸ்ரீ சித்திரவேலாயுதர் தாழ்பணிந்து இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.....

**தி.ச.இராசரத்தினம் ஐயரும் குடும்பத்தினரும்**
(ஆலய பூசகர்)

அச்சுவேலி வடக்கு([illegible]) அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுதர் தேவஸ்தானம்
அச்சுவேலி

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 08 - 06 - 1936

உதிர்வு 30 - 11 - 2019

இ.போ.ச.(வடக்கு) கிளிநொச்சிசாலை சாரதி விமலகாந் (கண்ணன்) அவர்களின்
பாசமிகு தந்தையார்

## அமரர் பொன்னு சுந்தரம்

எழில்மிகு பூமுகமும்
[illegible] புன்சிரிப்பும்
அன்பான அரவணைப்பும்
அளவற்ற பாசப்பிணைப்பும்
பரிவான வார்த்தைகளும்
பண்பான உம் வாழ்வும்
இன்றுடன் முடிந்ததுவோ
வெம்பித்துயர் அழுகின்றோம்
விம்மிமனம் வாடுகின்றோம்
[illegible]
ஏங்கித்தான் தவிக்கின்றோம்.


உங்கள் பிரிவால் துயருறும்...

சாலை முகாமையாளர், உதவி முகாமையாளர்
([illegible]) உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள், சாரதி,காப்பாளர்கள்.

இ.போ.ச.(வ),
கிளிநொச்சி சாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...!!!



மலர்வு 08 - 06 - 1938

உதிர்வு 30 - 11 - 2019

அச்சுவேலி வடக்கு தென்னை மரப் பயிர்ச்செய்கை சங்கத் தலைவர் ரஜனிகாந்த்
அவர்களின் பாசமிகு தந்தையார்

## அமரர் பொன்னு சுந்தரம்

*காற்றலையில் வந்த செய்தி கனவாகிப் போகாதோ*

*காலன் உன்னை கவர்ந்த செய்தி பொய்யாக மாறாதோ*

*நேற்றுவரை நிஜமாக இருந்தவரே இன்று*

*நிழலாகிப் போன மாயமென்ன - காலன்*

*உன் உயிரைப் பறித்ததன் மாயமென்ன*

*பிறப்பொன்று இருந்தால் இறப்பது நியதிதான்*

*ஆனாலும் உன் பிரிவைத் தாங்க முடியாது*

*உயிர் கூட அழுகுது ஐயா!*


ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!

பிரிவால் துயருறும் உறவுகளுடன்....

அச்சுவேலி வடக்கு

தென்னை மரப் பயிர்ச் செய்கைச் சங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 08 - 06 - 1938

உதிர்வு 30 - 11 - 2019

எமது [illegible] பாசமிகு தந்தையாகிய

அமரர்

## பொன்னு சுந்தரம்


புன்னகை பூத்த முகம்
பொறுமைக்கு உயர் இலக்கணம்
இதமான மொழி பேசி
எல்லோர் மனதிலும் இடம் பிடித்த ஐயா
கடமையை உயிராய் கொண்டு
குடும்பத்தில் நீங்களே அகல் விளக்கு
ஏனிந்த அவசரம் – ஐயா
மண்டத்திற்கு ஏகிவிட்டீர்கள்
ஏங்கி நாம் அழுகின்றோம் – நாம்
ஐயாவே உங்கள் ஆன்மா
இறைவனடியில் சாந்தி பெறுக

அச்சுவேலி

இ.யோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
08
06
1938

மறைவு
30
11
2019

எமது நிறுவனத்தின் முன்னாள் தலைவரும்
பணியாளர் ரூ.ஸ்ரீகாந் அவர்களின் அன்புத் தந்தையுமான

அமரர் - **பொன்னு சுந்தரம்**

எழில் மிகு பூ முகமும்
ஏற்றமுறு புன் சிரிப்பும்
அன்பான அரவணைப்பும்
அளவற்ற பாசப்பிணைப்பும்
பரிவான வார்த்தைகளும்
பண்பான உம் வாழ்வும்
இன்றுடன் முடிந்ததுவோ!
வெம்பித்தான் அழுகின்றோம்
விம்மி மனம் வாடுகின்றோம்
எண்ணற்ற துயருடனே
ஏங்கித்தான் தவிக்கின்றோம்.


**கூட்டுறவு உள்ளவரை உம் புகழ் நிலைத்திருக்கும்**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

அன்னாரின் பிரிவால் துயருறும்
பணியாளர் நலன் புரிச்சங்கம்
அச்சுவேலி ப.நோ.கூ.ச கூட்டுறவுச் சங்கம்

[illegible] தொ.பே-0776341239

# கண்ணீர் காணிக்கை



தோற்றம்
08
06
1938

மறைவு
30
11
2019


அமரர். **பொன்னு சுந்தரம்**

விதி முடித்தானோ இறைவன்
விரைந்தோடி விட்டாயே இவ்வுலக வாழ்வதனை மறந்து
நினைவுகளைச் சுமக்க வைத்து விட்டு
நீர் மட்டும் நிம்மதி தேடி
போனதென்ன சுற்றங்கள் கதறியழ
அமைதியாக உறங்குகின்றாய்.
சென்று வா இவ்வுலகம் எமக்கும் நிரந்தரமில்லை?

அன்னாரின் பிரிவால் துயருறும்
பரமசிங்காரம் குடும்பத்தினர்.
சர்வோதய வீதி ஆவரங்கால் மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இதய பூர்வ நன்றிகள்



எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னு சுந்தரம் அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீரஞ்சலி பதாதைகள் அச்சிட்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிகள் புரிந்த நல் உள்ளங்களுக்கும். வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்களை தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கவலையோடு இருந்த எமக்கும் உறவினர்களுக்கும் உபசரணைகளை வழங்கி எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் தகனக்கிரியையின் போது மயானம் வரை வருகைதந்து எம்மோடு தோளோடு தோள் நின்று செயற்பட்ட உற்றார் உறவினர்கள் அயலவர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அன்னாரின் சேவையினை கௌரவித்து வாடகை பெற்றுக் கொள்ளாது கதிரை பந்தல் வாடகை சேவையினை வழங்கிய அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தினருக்கும் அன்பளிப்பாக வாடகை பெறாது கதிரைகளை வழங்கிய அச்சுவேலி வடக்கு சனசமூக நிலையத்தினருக்கும் மலர்வளையம் வைத்து கௌரவித்த அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் நீத்தார் நயப்புரைகள் வழங்கியவர்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் அந்தியேட்டி கிரியை வரை மின்னொளி வழங்கிய செல்லதீபம் லைற் நிறுவனத்திற்கும், இம் மலரினை குறுகிய காலத்தில் அழகுற வடிவமைத்து அச்சிட்டுக் கொடுத்த K.D.M COLOUR LAB நிறுவனத்தினருக்கும், அந்தியேட்டி சபீண்டிகரண கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னு சுந்தரம் அவர்களின் வம்ச விருட்சம்




*காலம் சென்றோரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















KDM
COLOUR LAB
ATCHUVELY 077 6341239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org